## எந்திரன்களே வருக...!

## 25.04.2013

**வெற்றிக்கு வழி சொல்லும் விவேக தொடர்...!**





ஆட்கள் பற்றாக்குறையால் விவசாயமே கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், ‘விவசாயம் ஒன்றே வாழ்க்கை’ என்று உள்ளூரிலேயே தங்கி இருக்கும் உழவர்களுக்கு, உற்றத் தோழனாக கைகொடுப்பது.. கருவிகள்தான்! அத்தகையக் கருவிகள், அவற்றின் பயன்பாடு, அரசாங்கத்தின் மானியம் என அனைத்துத் தகவல்களும் இப்பகுதியில் உங்களுக்குக் கிடைக்கும்.

உழவு ஓட்டும் கருவி – கல்டிவேட்டர்

| | | |
|---|---|---|
| பவர் | : | 6 எச்.பி., டீசல் இன்ஜின், செல்ஃப் ஸ்டார்ட்டர் |
| விலை | : | 89,500 ரூபாய் |
| மானியம் | : | 50% |

இதன் பயன்பாடு பற்றி பேசுகிறார், சென்னை, கொரட்டூரைச் சேர்ந்த வேணுகோபால். “கல்டிவேட்டரை மூன்ற வருடமாக பயன்படுத்துகிறேன். இதை வைத்து, டிராக்டரால் ஓட்டுகிற மாதிரியே உழவு ஓட்டி, கழனில் சேடை போட முடியுது. சேடை ஓட்டும் போது, முன்னாடி இருக்கும் டயரை கழட்டிட்டு இரும்பு வீலை மாட்டிக்குவேன். மற்ற நேரங்களில் டயர் வீலை வைத்தே ஓட்டலாம். பின்னாடி பக்கம் கலப்பையோடு இணைத்துருக்கும் கார், அரை அடி ஆழம் வரை இறங்குகிறது. கலப்பையில் இருக்கும் பிளேடு மண்ணை கட்டி இல்லாமல் ‘பொலபொல’ என்று ஆக்கிவிடுகிறது.

டிராக்டரை ஜீரோ பாய்ண்டில் திருப்ப முடியாது. ஆனால், இதை எல்லா பகக்கமும் திருப்பி ஓட்ட முடியும். 3 அடி இடைவெளி இருக்கும் பூச்செடி, காய்கறி செடிகளில் நல்லாவே நுழைத்து ஓட்ட

முடியுது. செடிகளுக்கிடையில் களையெடுக்கும்போது பிளேடுகளோடு நீளத்தைக் குறைத்துக் கொள்ளும் வசதியும் இருக்கு. 1 லிட்டர் டீசல் போட்டால், 20 செண்ட் அளவு நிலத்தில் ஓட்டலாம். 3 வருடத்திற்கு ஒரு தடவை கலப்பையை மட்டும் மாற்றியிருக்கிறேன். 2 ஏக்கர் அளவுக்குள் வைத்திருக்கும் சின்ன விவசாயிகளுக்கு இது ரொம்ப உபயோகமாக இருக்கும்.

**தெளிப்பான்**

பெயர் : பேட்டரி ஸ்ப்ரேயர்

பவர் : 12 வோல்ட்

கொள்ளளவு : 16 லிட்டர்

எடை : 4.8 கிலோ

விலை : 4,200 ரூபாய்.

மானியம் : 50%

திருவள்ளூர் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த பரசுராம், இதை வாங்கி 2 வருடம் ஆகிறது. 2 மணி நேரம் சார்ஜ் போட்டால்… 10 டேங்க் அளவுக்கு தெளிக்க முடியுது. தெளிக்கும் போது தலை, மூக்கு, கால்களுக்கு பாதுகாப்பு கவசம் போட்டுக்கறது நல்லது. நல்ல உபயோகமாக இருக்கிறது என்கிறார்.

**நகர்வு விசை தெளிப்பான்!**

பெயர் : ட்ராலி ஸ்ப்ரேயர்

பவர் : 5.5 எச்.பி. – 4 ஸ்ட்ரோக் (பெட்ரோல் இன்ஜின்)

கொள்ளளவு : 100 லிட்டர்

எடை : 63 கிலோ

குழாய் நீளம் : 30 மீட்டர் (100 அடி)

விலை : 27,500 ரூபாய்

மானியம் : 50%



உத்திரமேரூர், மணல் மேட்டைச் சேர்ந்த வெங்கடேசன் தன்னுடைய தோப்புக்கு இத்தெளிப்பானைப் பயன்படுத்தி வருகிறார். “15 ஏக்கரில் மா, சப்போட்டா, கொய்யா, தென்னை, எலுமிச்சை மரங்கள் வைத்திருக்கிறேன். முன் கை பம்ப் வைத்துதான் மருந்து அடித்துக்

கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு தோட்டம் முழுக்க, அலைவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும். அதனால்தான் இந்த ட்ராலி ஸ்ப்ரேயரை வாங்கினேன். 100 லிட்டர் அளவுக்குக் கொள்ளளவு இருப்பதால், வேலை சுலபமாகிவிடுகிறது. தோட்டம் முழுக்க, மூலை முடுக்கெல்லாம், வண்டியைத் தள்ளிகொண்டு போக முடிகிறது. 1 லிட்டர் பெட்ரோல் ஊற்றினால், 200 லிட்டர் அளவிற்கு தெளிக்க முடியும். ஒரு நாளைக்கு 800 லிட்டர் வரை தெளிக்கலாம். தேவையான அளவிற்கு பிரஷர் கொடுப்பதற்கும் வசதி இருக்கு. அதிகபட்சமாக 40 அடி உயரம் வரை தெளிக்கலாம் என்கிறார்.

தொடர்புக்கு

வேணுகோபால், செல்போன் : 93609 60988

பரசுராம், செல்போன் : 97508 10144

வெங்கடேசன், செல்போன் :98427 70935

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.04.13** www.vikatan.com